**மினிப்பே பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 28 ஆந் திகதி மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மினிப்பே பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 06 சொத்துகளின் பெறுமதி ரூபா. 2,383,566 ஆல் குறைந்தும் 03 சொத்துகளின் பெறுமதி ரூபா. 1,103,514 ஆல் அதிகரித்தும் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |
| | அபிவிருத்தித் திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 5,000,910 மதிப்புள்ள தொகை மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 இன் கணக்குகளை தயாரிக்கும்போது சீராக்கப்படும். |
| (iii) | ஹங்குரன்கெத்த சபையிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 24,928,660 மதிப்புள்ள மோட்டார் கிரேடர் கைப்பற்றப்படாமல் கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர் செய்யப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நிலையான வைப்புக் கணக்கின் இருப்பில் ரூபா. 383,870 குறைத்து கணக்கிடப் பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர் செய்யப்படும் |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கு மீதிகளின் பெறுமதியான ரூபா. 141,819,755 கணக்கு, அக் கணக்கு மீதிகளுடன் தொடர்பான பயன்பாட்டுப் பேரேடுகளின் மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா. 5,217,479 வித்தியாசம் காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | காணிகள், கட்டிடங்கள் மற்றும் நீதிமன்ற தண்ட பணம் சரி செய்யப்படும். கடை வாடகைகள் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் பொருத்தப்பாடு செய்யப்பட்டுள்ளது. |

## 1.4 பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### (i) பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு வருட காலம் கடந்த நிலையில் பெற வேண்டிய கணக்கு மீதி ரூபா. 9,051,084 ஆகும். | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொழில் துரையிலிருந்து கடன்களை விரைவாக மீளப் பெறவும் வீட்டு வாடகை, நீர் கட்டணம், கடை வாடகை, வருமானம் என்பவற்றை கடனாளிகளிடமிருந்து மீட்கவும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

### (ii) செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓராண்டு காலம் கடந்த நிலையில் செலுத்த வேண்டிய முழுத் தொகை ரூபா. 4,408,978 ஆகும். | செலுத்த வண்டிய மீதிகளை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தோழில் துரைக் கடன் மற்றும் செலவுக்காக வாங்கப்படும் கடனை செலுத்துவதற்காக செயற்படுவேன். முற்பணம் ஆரம்பத்திலிருந்து வரும் மீதியாகும். |

### (இ) கணக்காய்விற்காக தேவைப்படும் எழுத்து மூலமான ஆதாரங்கள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உரித்தை உறுதிப்படுத்தும் கட்டளைகள், கோப்புகள் மற்றும் ஆவணங்கள் போன்ற தகவல்களை முன்வைக்கத் தவறியதால் ரூபா 124,303,547 பெறுமதியான 4 கணக்கு பிரிவுகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக சரிபார்க்க முடியவில்லை. | கணக்கு மீதியை உறுதி செய்யும் வகையிலான சான்றகளை சமர்ப்பிக்க வேண்டும். | கையளிப்பு கட்ளை உத்தரவுகள் வழங்கப்படவில்லை. பதிவழிப்பதற்காக இப்பிரிவுக்கு பொறுப்பான அமைச்சரிடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எழுத்து மூலமான ஆதாரங்கள் இல்லை. ஆரம்பத்திலிருந்து தொடரும் மீதியொன்றாகும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்தின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,860,375 ஆக இருந்ததை அடுத்து, அதற்கு அடுத்த வருடத்தின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 4,541, 312 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் குத்துகையும் | 1,332,892 | 1,332,892 | 929,810 | 403,082 | 553,942 | 592,883 | 452,890 | 139,993 |
| (ii) | வாடகை | 3,280,589 | 3,919,412 | 2,338,827 | 1,580,585 | 3,238,461 | 3,882,678 | 3,258,433 | 624,246 |
| (iii) | அனுமதிப்பத்திரக்கட்டணங்களும் | 2,510,000 | 2,312,897 | 2,312,897 | - | 2,068,000 | 1,989,272 | 1,989,272 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,624,041 | 32,838,739 | 31,305,060 | 1,533,679 | 6,271,500 | 30,011,618 | 28,465,922 | 1,545,696 |
| | | 12,747,522 | 40,403,940 | 36,886,594 | 3,517,346 | 12,131,903 | 36,476,451 | 34,166,51 | 2,309,935 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிலுவை வருமானம் ரூபா 42,713,875ஆகவிருந்ததுடன், வருடத்துக்கான மொத்த அறவீடு ரூபா. 36,886,594 ஆகவிருந்ததினால் அறவீட்டு சதவீதம் 86 ஆகவிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,308,583 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 1,804,500 தொகையும் காணப்பட்டன. | நீதிமன்ற தண்டப்பணத்தினை சபைக்கு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல். | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126(1) ஆம் பிரிவிற்கமைவாக 30 முக்கிய காரணிகளை செயற்படுத்துவதற்காக உப விதிகள் விதிக்கப்பட்டவருந்தும் 13 | சபைக்கு வருமானம் ஈட்டத்தக்க சந்தர்ப்பங்களை இனங்கண்டு உப விதிகளை அமைத்து | உப விதிகளை விதிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன் |

| | | |
|---|---|---|
| காரணிகளுக்காக மாத்திரமே உப விதிகள் விதிக்கப்பட்டன. | வருமானத்தை ஈட்டல். | |

**(ஆ) எதிர்பார்த்த பலன்களைப் Out come) பெற முடியாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 நீர்த் திட்டங்களில் 12 நீர் வாடிக்கையாளர்களிற்க்கு மாத்திரம் சலுகைகள் வழங்கப்பட்டிருந்தது | எதிர்பார்த்த பலன்களைப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | புதிலளிக்கப்படவில்லை |

**(இ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மொரயாய நூலகத்தை சுற்றி வேலியமைப்பதற்கான தொழிலிற்கு ரூபா 207,562 மானியமாக ஒதுக்கப்பட்டிருந்தாலும், செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் | எதிர்காலத்தில் அபிவிருத்தித் திட்டத்திற்கேற்ப நடவடிக்கைகள் எடுப்பேன் |

**(ஈ) சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உக்கலடையாத கழிவுப் பொருட்களை மறுசுழற்சி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கழிவு தொடர்பான செயற்திட்டத்திற்கு அருகாமையில் சூழலிற்கு தீங்கு விளைவிக்கும் எரிபொருள் பாவனை செய்யப்பட்டிருந்தது. | உக்கலடையாத கழிவுப் பொருட்களை முறையாக அப்புறப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வெற்று நிலத்தை நிறப்ப இடம் இல்லாமையினாலும், பர்னரொன்று இல்லாமையினாலும் |

(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தயின் இலக்குகளை இனங்கண்டு, அவற்றின் முன்னேற்றங்களை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் அமைப்பேன். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மொத்த நீர் பாவனையாளர்கள் 1735 இல் 1422 இற்க்கு பொருத்தப்பட்ட நீர் மீற்றர் செயலிழந்திருந்தது. | நீர்மானிகள் பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வடிகட்டி பொருத்தப்படாமல் இருப்பதால் நீர் மானிகள் செயலிழந்துள்ளது. வடிகட்டி தாங்கிகள் கட்டப்பட்ட பின் அனைத்து இடங்களுக்கும் நீர் மீற்றர்கள் பொருத்தபடும். |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **பதவி வெற்றிடங்களும் மிகைகளும்** | | |
| 7 பதவிகளில் 18 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 02 பணி நீக்கங்களும் காணப்பட்டன. | பதவி வெற்றிடங்களை நிறப்புவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பெற்றுத் தருமாறு உள்ளுராட்சி திணைக்களம் மற்றும் ஆசு சேவை ஆணைக்குழுவிடம் அறிவிக்கபட்டுள்ளது. ஏனைய பதவிகளில் ஆட்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 3.4 செயல்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை கடை வாடகை ரூபா. 4,851,446 ஆக காணபட்டது. | இடத்தை கைப்பற்றிக்கொண்டு கடை வாடகை வசூலிக்கப்பட வேண்டும். | கைப்பற்றும் உத்தரவின்படி கையேற்கப்பட்டு ,நிலுவை வாடகைகளுக்காக வழக்கு தொடரப்பட்டுள்ளது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 செயளற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா.1,978,050 பெறுமதியான 5 வாகனங்கள் செயளற்று பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டது. | செயலற்ற வாகனங்களை ஒதுக்குதல் மற்றும் பயனுள்ள பொருட்களை புதுப்பித்தல். | 2019.01.22 நாள் அன்று மகா சபையின் மூலம் ஏலம் விடுவதற்கு தீரமானம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய மேற்கொண்டு |
| (ஆ) | பல்நோக்கு கட்டிடத்தின் தரை தளத்திலும் இரண்டாம் மாடியிலும் 14000 சதுர அடி அளவான இடம் பயன்படுத்தப்படாது உள்ளது. | ஏதிர்பார்க்கப்பட்ட விளைவகளை பெற்றக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (இ) | ஹஸலக கொலொங்கொட மொத்த இருப்பு கட்டிடம் மற்றும் பழைய நீதிமன்ற கட்டிடம் பயன்படுத்தப்படாது உள்ளது. | ஏதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை பெற்றக் கொள்ள நடவடிக்கைகள் எடுப்பதோடு மதிப்பிட்டு குத்துகைக்கு விட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வியாபாரிகளின் தேவைகளுக்கு பொருத்தமானவாறு எற்பாடு செய்யப்படுவதோடு, நீதிமன்ற கட்டிடம் கிராம சக்தி அலுவலகமாக மற்றும் உத்தியோகபூர்வ இல்லமாக மாற்றியமைக்க பொது |

| | | | |
|---|---|---|---|
| | | | சபை ஆலோசணை செய்துள்ளது. |
| (ஈ) | ரூபா. 848,434 பெறுமதியுடைய நீர் உபகரணங்கள் பயன்படுத்தப் படாது காணப்பட்டது. | தேவைகளை இனஙகண்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |
| (உ) | ஹங்குரன்கெத பிரதேச சபையினால் 2018.05.16 பெற்றுக்கொண்ட ரூபா 24,928,660 பெறுமதியான மோட்டார் கிரேடர் செயலிழந்து காணப்பட்டது | வருவாயை பெற்றக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சாரதி ஒருவருக்கு தேவைகள் ஏற்படும் போது ,மேற்கொண்டு வருவாயை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.6 இனங்காணப்பட்ட இழப்புகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னால் தலைவர் அடித்தளமொன்றை உடைத்து வேறுபடுத்தியதன் காரணமாக ஏற்பட்ட ரூபா. 24,709 இழப்பிற்கான வழக்கில், புகார் செய்தவருக்கு ரூபா. 500,000 மற்றும் அதற்கான சட்ட வட்டியையும் செலுத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. பிரதேச சபை பணம் செலுத்தத் தவறியதால் , பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா. 1,500,000பெறுமதியான கெப் வாகணம் மற்றும் ஹஸலக நகரத்தில் இலக்கம் 14 இல் அமைந்திருக்கும் கடை நீதி மன்றத்தின் பொறுப்பின் கீழ் வந்தபோது, வழக்கு தீரத்து வைக்கப்பட்டு 2018 ஜுலை 26 ஆம் திகதி ரூபா. 530,500 நஷ்டஈடாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த வழக்கினால் சபைக்கு ஏற்பட்ட ரூபா. 2,030,500 இழப்பு தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | இழப்புகளுக்கு நிதி விதி முறைகளிற்கேற்ப விசாரணைகளை மேற்கொண்டு பணத்தை மீட்டெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண் டும். | நிதிப் பிரமாணம் 104 பரிசோதனை மேற்கொண்டு அதற்கு பொறுப்பானவர்களை உறுதி செய்த பின் எதிர்வரும் நடவடிக்கை எடுபக்கப்படும். |

**3.7 தெளிவான மோசடி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான ஹெக்டயார் 0.0487 கொண்ட இடம் அனுமதி இல்லாமல் ஒரு நபரால் பதியப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான இடங்களுக்கு தீர்வு செய்யநடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இடத்திற்கான அனுமதி பத்திரம் அல்லது கைப்பற்றும் உத்தரவு இல்லாத காரணத்தால் உரிமையை பெற்றுக்கொள்ள செயற்பட்டாலும் அதை பற்றி தீர்மரிக்க முடியவில்லை. |

**3.8 பெறுகைகள்**

**ஓப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டு கொலொங்கொட – பலுகொல்ல வீதியில் கொலொங்கொட விஹாரைக்கு அருகாமையிலிருந்து பலுகொல்ல சந்தி வரை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா. 16,152,322 இற்கு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு ரூபா. 16,239,295 இற்கு வேலை முடிவடைந்திருந்தது. | | | |
| (i) | மதிப்பிடப்பட்ட வேலை பிரிவு 3 இன் படி வீதியின் 150 mm ஆக தடிப்பத்தை அதிகரிக்க ABC ஐ கொண்டு பரப்புவதற்கு ரூபா. 3,125,417 ஒதுக்கப்பட்டிருந்த போதும், பரிசோதனை அறிக்கையின்படி ABC கலவையின் தடிப்பு 10 இடங்களில் 8 இடங்கள் சரியான தரத்தில் இல்லை | குறித்துரைக்கப் பட்ட தரத்தில் செய்யப்பட வேண்டும் | பதில்கள் பின்னர் தயார் செய்து அனுப்பப்படும். |
| (ii) | மதிப்பிடப்பட்ட வேலை பிரிவு 4 இன் படி வீதியின் 1690)ஒ 3 ஒ 0.05 (அளவில் Asphalt தளம் அமைப்பதற்கு மெட்ரிக் | குறித்துரைக்கப் பட்ட தரத்தில் செய்யப்பட வேண்டும் | பதில்கள் பின்னர் தயார் செய்து அனுப்பப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | டொன் 595.72 இற்கு ரூபா. 7,947,857 செர்க்கப்பட்டிருந்தாலும், தார் தளத்தின் தடிப்பு பற்றிய பரிசோதனையின்படி 10 இடங்களில் 3 இடங்கள் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் தடிப்பு காணப்படவில்லை | | |
| (iii) | பரிசோதனை அறிக்கையின்படி இந்த வீதியின் அடிப்பகுதி வெடிப்பதை பரிசோதிக்கப்பட்ட போது 10 இடங்களில் 8 இடங்கள் சரியான முறையில் செய்யப்படவில்லை. | குறித்துரைக்கப் பட்ட தரத்தில் செய்யப்பட வேண்டும் | பதில்கள் பின்னர் தயார் செய்து அனுப்பப்படும். |
| (iv) | இந்த வீதியின் 1700 மீட்டரில் 600 மீட்டர் ஆன சிக்கல்கள் இல்லாத பகுதிக்கு பில்களின் பெறுமதிக்கேற்ப 35 சதவீதமான ரூபா. 5,964,534 செலுத்துவதற்க்கு 2018 டிசம்பர் 28 ஆம் திகதியன்று அனுமதியளிக்கப்பட்டிருந்தாலும், மீதமுள்ள 1100 மீட்டருக்கு அதிகாரிகள் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. | ஒப்பந்தக்காரர்கள் பலவீனமான மேற்பார்வை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | பதில்கள் பின்னர் தயார் செய்து அனுப்பப்படும். |